DR. H. V. HANDE : I am very happy to hear these things. Will the Hon. Minister be able to tell us whether the tourists who will be coming from the next month onwards will be getting enough water and what the source of water supply is?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The Collector has been asked to take proper action.

(x) திருச்சி நகரில் காலரா பரவுதல்

திரு. எம். பூபதி: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசர பொது முக்கிய மான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஜனத்தொகை கொண்ட திருச்சி நகரில் வாழும் மக்களில் நூற்றுக்கணக்கான பேர்கள் கொடிய நோயான காலராவால் பாதிக்கப்பட்டதால் பலர் இறந்து விட்ட விஷயம்".

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி நகராட்சிப் பகுதி, காலரா பரவலாக ஏற்படும் பகுதியாகும். இப்பகுதியில் நீர் வழங்குவதற்கான வசதி இருந்த போதிலும், அநேகமாக ஒவ்வோர் ஆண்டு முதல் மூன்று திங்களில் இப்பகுதியில் காலரா பரவுகிறது.

திருச்சிராப்பள்ளி நகராட்சிப் பகுதியில் காலரா பரவியிருப் பதாக இந்த ஆண்டு 22—4—1968-ம் தேதியன்று ஐயுறவு ஏற்பட்டது. அது முதற்கொண்டு 16—3—1968 தேதி வரை 263 பேருக்கு காலரா கண்டதாகவும், இதில் 18 பேர் மாண்டதாகவும் தெரிகிறது. குடிசைப் பகுதிகளிலும் வாழ்க்கைத்தரம் குறைந்த ஏனைய பகுதிகளிலிருந்துதான் பெரும்பாலும் காலரா கண்டிருப் பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 16—3—1968 தேதி வரை காலரா தடுப்பு ஊசிகள் 1,57,440 பேருக்குப் போடப்பட்டுள்ளன. இப்பணி மேலும் நிறைவேறி வருகிறது. இவ்வாறு காலரா ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டவுடன் சுகாதாரப் பணி—குடும்ப நலத்திட்ட கூடுதல் இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த சுகாதார ஆராய்ச்சி அதிகாரி நிலைமையைச் சரிவரக் கண்டறிவதற்காக 1968 பிப்ரவரி முதல் வாரத்தில் அனுப்பி வைக்கப்பட்டார். அதன் பின்னர் பொதுச்சுகாதார உதவி இயக்குநரும் (S.E.D.) திருச்சிராப் பள்ளிக்குச் சென்று நிலைமையை நேரில் பார்வையிட்டார். காலரா தடுப்பு ஏற்பாடுகளும், கட்டுப்பாடு நடவடிக்கைகளும் மேற்கொள்வதற்காக, நகராட்சிச் சுகாதார அதிகாரிக்கும், ஏனைய பொதுச்சுகாதாரப் பணியாளருக்கும் தேவையான உத்தரவுகளைப் பிறப்பித்தார். சூழ்நிலைச் சுகாதாரம் தரம் குறைந்துள்ள பகுதி களில் சிறப்பாக நாட்டம் செலுத்துமாறும் உத்தரவுகள் பிறப் பிக்கப்பட்டன. உணவகங்களிலும், சிற்றுண்டிச் சாலைகளிலும்,

1968 மார்ச் 30] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

சுகாதாரத்தையும், தூய்மையையும் மேம்படுத்துவதிலும் சிறப்பாக நாட்டம் செலுத்தப்பட்டுள்ளது. நகராட்சியின் பணியிலுள்ள 16 கோட்ட மேற்பார்வையாளர்களும், காலரா சிகிச்சைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும், சுகாதார உதவியாளர்களிலிருந்து 5 காலரா மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த நகராட்சியின் ஏனைய 11 சுகாதார உதவியாளர்களும், காலரா சிகிச்சைப் பணியையே கவனித்து வருகின்றனர். மேற்கூறிய பணியாளர்களின் பணியினை 4 தேர்வுத்தர சுகாதார மேற்பார்வையாளர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். ஊசி போடுவது தவிர, நீர் நிலையில் குளோரின் கலத்தல், மருந்து தூவி கிருமி நீக்குதல், நோயாளிகளைத் தனிப்படுத்தி சிகிச்சையளித்தல் முதலான கட்டுப்பாடு நடவடிக்கைகளும் முறைப்படி நிறைவேற்றப்பட்டன. மாவட்டச் சுகாதார அதிகாரியும், திருச்சிராப்பள்ளி நகராட்சிச் சுகாதார அதிகாரியும் நிலைமையை விழிப்புடன் கவனித்து வருமாறும், காலரா பீடித்த பகுதிகளிலும், பீடிக்காத பகுதிகளிலும் இயன்ற அளவில் எல்லா மக்களுக்கும் ஊசி போட்டு, காலராவை இயன்ற விரைவில் கட்டுப்படுத்திக் குறைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட பொதுச்சுகாதாரப் பணியாளரின் பணியினைக் கண்டிப்புடன் மேற்பார்வையிடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். உணவகங்களிலும், சிற்றுண்டிச் சாலைகளிலும் தூய்மை பேணப்படும் பொருட்டு, அவற்றைக் குறித்த காலத்திற்கொருமுறை சென்று பார்வையிடும்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நிலைமை தொடர்ந்து விழிப்புடன் கவனிக்கப்பட்டு வருகிறது. காலரா மேலும் பரவுவதைத் தடுப்பதற்காக எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப் படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு முதல் அமைச்சர் கவனத்திற்கு திரு. க. இராமமூர்த்தி ஒரு காரியத்தைக் கொண்டு வரவேண்டும். ஆனால், அவர் இடத்தில் இல்லாததால், கவன ஈர்ப்புத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(xi) மதுரை மாவட்டத்தில் தண்ணீர் விநியோகம் அடிக்கடி நிறுத்தப்படுதல்.

THIRU M. RAJANGAM : Mr. Speaker, Sir, I call the attention of the Hon. the Minister for Public Health to a matter of urgent public importance, namely, the frequent stoppage of water supply on several occasions in the Combined Water Supply Scheme in Madurai district in areas like Gudalur, Cumbum, Pudupatti, Hanumanthanpatti, Uthamapalayam, Chinnamanur and Kamaya Goundanpatti, Markayankottai, etc., and the consequent difficulties experienced by the public in those areas especially ladies on account of drinking of non-protected water available and the necessity to take immediate and urgent steps to solve this problem.